முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1107

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.10.2022, திங்கட்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா போற்றி
தரணிகாத்திடும் தேசிகா போற்றி
கர்மவினை வெல்லும் கந்தா போற்றி
கந்தனின் அவதார அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 23 ம் நாள் 10.10.2022, திங்கட்கிழமை)
ஆற்றல்பட அரங்கனும் தேற்றம் தருகின்ற
அற்புதமிக்க ஞானியாய் அவதாரம் எடுத்து வர
3. வருகவே கலியுக மக்களெல்லாம்
வணங்கி அரங்கனை தொடர்ந்தால் போதும்
பெருமைமிக்க ஞான ஆட்சி பேருலகம்
சடுதி கண்டு மாற்றம்
4. மாற்றம் இனிதே காணக்கூடும்
மக்களெல்லாம் ஞானிகள் பூஜை செய்து
ஆற்றல் பட அரங்கனை
உயர் குருவாக எண்ணி வணங்கிவர
5. வருகவே கலியுகத்தில் அற்புதமாக வந்தடையும்
சடுதி மாற்றமெனும் சன்மார்க்க வழியை
இடரின்றி ஏற்றால் உலகம் மாறும்
இணைந்து தர்மம் செய்தால் இந்த கலியுகம் மாற்றம் பெறும்
6. ஆகவே அரங்கனைத் தொடர்ந்து உலகோர்
ஆற்றல்பட ஞானசேவை ஆற்றிவர
மாற்றமாக உலகம் சடுதி மாறும்
மரணம் வெல்லும் தன்மைகளும் கூடி
7. கூடியே அரங்கன் ஆசிபட
குறையில்லா தர்மங்கள் நாடெங்கும் வளர்ந்து
ஈடேற்றம் சன்மார்க்க வழியாக இயங்கும்
உலக மாற்றம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–